அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044-2814 3306, 2814 3307, fax : 044-4212 4624, e-mail : orsk14@gmail.com

அ.எண். 132/2016

தேதி 17.08.2016

# சட்டபேரவையில் மானிய கோரிக்கை மீதான விவாதத்தின்போது தி.மு.க-வின் வெளிநடப்பு மற்றும் அமளியை அரங்கேற்றியது வெறும் நாடகம் சமக நிறுவனத் தலைவர் ஆர் சரத்குமார் கருத்து

தமிழக சட்டமன்றத்தில் மக்கள் நல்வாழ்வுக்காக சீரிய திட்டங்களைத் தீட்டி செயல்படுத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையில் நடந்துகொண்டிருக்கும் அரசுக்கு களங்கம் விளைவிக்கும் நோக்கத்தில் தி.மு.க உறுப்பினர்களின் வெளிநடப்பு மற்றும் அமளியில் ஈடுபட்டது வெறும் நாடகம் தான் என்பது தெளிவாக மக்களுக்கு தெரிகிறது.

“நமக்கு நாமே” என்ற பொதுவான வார்த்தையை பயன்படுத்தி இவ்வளவு பெரிய அமளியை ஏற்படுத்திய எதிர்க்கட்சித்தலைவர் அவர்கள், 24 மணி நேரத்திற்கு முன் (16.8.2016) எங்களது உறுப்பினர்களின் செயலுக்கு மன்னிப்பு கேட்க தயங்கமாட்டேன் என்று கூறியவர் இப்போது தன் நிலையை மாற்றிக்கொண்டு இன்று சட்டமன்ற பேரவையில் ஒரு நாடகத்தை அரங்கேற்றினார்கள்.

பேரவைத் தலைவர் அவர்கள் அவையை நடத்த ஒத்துழைப்பு கொடுங்கள் என்று பல முறை கூறியும், சட்டமன்றத்தில் இது போன்று வெளிநடப்பு மற்றும் அமளியில் ஈடுபட்டு தி.மு.க உறுப்பினர்கள்தான் திட்டமிட்டு, தேவையில்லாமல் நேரத்தை வீணடித்து பேரவைக் கூட்டம் அமைதியாக நடைபெறாமல் இருப்பதற்கு வழிவகுக்கிறார்கள். திட்டமிட்டு செய்யாததை, திட்டமிட்டு செய்தார்கள், திட்டமிட்டு செய்தார்கள் என்று கூறி தி.மு.க உறுப்பினர்கள்தான் திட்டமிட்டு நாடகத்தை நடத்தியிருக்கிறார்கள்.

சபாநாயகர் அவர்களின் உருவபொம்மையை எரிக்குமலவுக்கு பிரச்சனையை வளர்த்திருப்பது வேதனைக்குரியது. இவ்வாறு செய்திருப்பது, மக்கள் மீதும், மக்களின் நலன் மீதும் அக்கறையின்மையை மேலும் உறுதியாக்குகிறது. இதுபோன்ற செயல்பாடுகளில் ஈடுபடாமல் ஏற்கனேவே கூறியபடி ஆக்கபூர்வமான செயல்களில் ஈடுபட்டால் பேரவைக் கூட்டமும் அமைதியாக நடந்து மக்களுக்கு பயன்தரும் திட்டங்களை கொண்டுசேர்க்க முடியும்.

நன்றி, வணக்கம்,
உழைப்பவரே உயர்ந்தவர்,
என்றும் அன்புடன்,



**ஆர்.சரத்குமார்** B.Sc
தலைவர்